ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 18

ஆடி 1 – 31

2022

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் 18 வாயிலாக எம்மவர்களை
சந்திப்பதில் மகிழ்ச்சி...

மனோகரா விளையாட்டுக்கழகம் என்றுமே வடமாகாணத்தில் புகழ் பெற்ற விளையாட்டுகழகம் தான். மனோகரா விளையாட்டு வீரர்களுக்கென்ற தனி மரியாதை உண்டு. மனோகராவின் விளையாட்டு வீரர்களில் பலர் கல்வியாலும் அரச உத்தியோகங்களாலும், தனியார் உத்தியோகங்களாலும் உயர்ந்த பதவியை வகிப்பவர்கள். தனியே விளையாட்டோடு மட்டும் நின்று விடாது கல்வியையும் நன்கு கற்றதனாலேயே எங்கு சென்றாலும் எமது வீரர்களுக்கு தனி மரியாதை உண்டு. எமது அணியில் அங்கம் வகித்த பலர் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, விரிவுரையாளர்களாக, அதிபர் களாக, விளையாட்டு உத்தியோகத்தர்களாக, வங்கியாளர் களாக, ஆசிரியர்களாக இருக்கிறார்கள். இது என்றும் பெருமைக்குரிய விடயமே. நாம் தொடர்ந்தும் இப் பெயரை காப்பாற்ற வேண்டும் இது எம் அனைவரின் கடமையு மாகும். இதற்கு எம் முன்னோரும் ஒரு காரணமாக அமைந்தார்கள் என்றால் மிகையாகாது. அதாவது விளையாட்டுக்குரிய நேரத்தில் மட்டும் மைதானத்தை பயன்படுத்த அனுமதித்தார்கள். மிகவும் இறுக்கமாக இருந்து எம்மவர்களை கல்வியில் முன்னேற்றிய மூத்தோரை நாம் மறந்து விடலாகாது.

சில காலம் தொய்வு நிலையில் இருந்த எமது மனோகரா அணி மீண்டும் புதுப்பொலிவு பெற்று வடமாகாணத்தில் முதற்தர அணியாக தற்போது திகழ்ந்து வருகின்றது. அனைத்து வீரர்களும் தமது கடமையை உணர்ந்து சரிவர விளையாடி வருகின்றார்கள். தற்போது வடமாகாணத்தில் மிகுந்த பலம் பொருந்திய அணியாக எமது அணி திகழ்கின்றது. பொறுப்புடன் விளையாடி வரும் அனைத்து வீரர்களுக்கும் எமது வாழ்த்துக்கள், தொடர்ந்தும் அவர்கள் மனோகராவின் நாமத்தை பறை சாற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். கல்வியுடன் நமது அடையாளமாக இருப்பது உதைபந்தாட்டமும் என்றால் அது மிகையாகாது. தொடர்ந்து அந்த பெயரை தக்க வைத்துக் கொள்வோம்.

- க.பரணீதரன்

கல்வியும் விளையாட்டும் சேர்ந்தாலே ஆரோக்கியமான வாழ்வு


## உள்ளே...

**பேசப்பட வேண்டிய எமது
சமூக நிறுவன செயற்பாட்டாளர்
நடேசு பாரதராாசா**



**காலம் கரைத்த மனப்பதிவுகள் – 5**

**இளைப்பாறிய சாலைப் பரிசோதகர்
அமரர் திரு பொன்னையா துரைராசா(பீற்றர்)**



**எம்மவர்கள் சிறுகதை – 8
“பிறக்குமா நமக்கு ஒரு விடிவு காலம்”
– வி.எழில்நிலா**

**குட்டிக்கதை – 1
“பலசாலி” – சயானந்தன்**

**அஞ்சலி
1.யோகதாஸ் அசோக்காந்
2.சிவதாசன் சிவபாக்கியம்
3.சிவராசா தவராணி**

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# பேசப்பட வேண்டிய எமது சமூக நிறுவன செயற்பாட்டாளர் நடேசு பாரதராாசா

■செல்லக்குட்டி கணேசன்

எமது கிராமத்தின் வரலாற்றை, காலத்தை வகுத்துப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. அவ்வாறு பார்க்கப்படும் போது தான் பலருடைய பெறுமானங்கள் வெளியே தெரிய வரும். படித்தவர்கள், பதவியில் உள்ளவர்கள், பணம் படைத்தவர்கள் என்று சிந்திக்கின்ற கூட்டத்தினர் மத்தியில், இவ்வாறானவர் களை விடவும் எமது கிராமத்திற்கு தங்களது பங்களிப்பை நல்ல முறையில் வழங்கி, தங்களது செயற்பாடுகளை நாகரிகம் கருதி தாங்களே எடுத்துச் சொல்ல முன்வராத நிலையில் பலர் உள்ளனர். இவ்வாறானவர்களின் செயற்பாடுகளையும் வெளியே கொண்டு வருவதன் மூலமே எமது கிராமத்தின் வரலாறு பூரணத்துவமடையும். எனவே தான் இவ்வாறானவர் களையும் "நாங்கள்" வெளியே கொண்டு வந்து எமது தலைமுறையினருக்கு எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்புமிக்க செயற்பாடுகளில் இயங்கி வருகிறோம். இந்த வகையில் எம்மால் பார்க்கப்பட வேண்டிவர்கள் பலர் உள்ளனர். அந்த வகையில் இப்பகுதியில் இன்று பார்க்கப்படவுள்ளவர் தான் அல்வாய் தெற்கு (மனோகரா) வடலித் தோட்டம் குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி.நடேசு பொன்னம்மா தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்த ந.பாரதராசா அவர்கள்.

இவர் 05.02.1950ம் ஆண்டு பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கற்று பின்னர் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் க.பொ.த (சா.த) வரை தொடர்ந்தார். கல்வி கற்கும் காலத்தில் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது இணைப்பாட விதானங்களில் ஒன்றான விளையாட்டிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வெற்றியும் கண்டார். சிறப்பாக வடமராட்சி ஆசிரியர் சங்கம் (V.T.A) நடாத்திய போட்டிகளில் ஈட்டி எறிதல், உயரம் பாய்தல் ஆகிய விளையாட்டுக்களில் தனது திறமையை வெளிக் காட்டி முறையே 2ம், 1ம் இடங்களைப் பெற்று ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றவராவார். மேலும் இவர் சிறந்ததொரு துடுப்பாட்ட வீரராகவும் திகழ்ந்தார். படிக்கும் காலத்திலேயே நல்ல வாசகனாகியவரை ஊக்கப்படுத்துவதிலே இவரது மூன்றாவது சகோதரன் அமரர் ந.சின்னராசா செயற்பட்டார் என்பது பலரும் அறிந்ததே. இவர் நல்ல வாசகன் மட்டுமல்ல நல்ல நூல்களை சேர்த்து மற்றவர்களையும் வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துகின்ற ஒருவராகவும் இருந்து வந்துள்ளார். இவரது இல்லத்தில் (தாய்மனை) ஒரு சிறிய அளவிலான நூல் நிலையம் இருந்ததை நான் அறிவேன். இங்கே தான் எம்மைப் போன்ற சிறுவர்கள், இளைஞர்கள் இந்தியச் சஞ்சிகைகளான குமுதம், ஆனந்த விகடன், குங்குமம், இதயம் பேசுகிறது, தீபம் போன்றவற்றை பார்த்திருக்கிறோம், படித்திருக்கிறோம்.

க.பொ.த (சா/த) வரை பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டவர் அதன் பின்னர் குடும்ப பொருளாதார மேம்பாட்டிற் காக தனது கணிசமான பங்கை கட்டடத்தொழிலில் ஈடுபட்டதன் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தார். காலப் போக்கில் அத்தொழிலில் நல்ல தேர்ச்சி பெற்று நல்லதொரு மேசனாக மிளிர்ந்தார். அது மட்டுமல்லாமல் சிற்பாசாரியார்களுடன் இணைந்து ஆலய வேலை களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் அக்காலப் பகுதிகளில் மாமிச உணவுவகைகளை ஒறுத்து தெய்வ சிற்பங்களை செய்வதிலும் தேர்ச்சி பெற்று நல்லதொரு சிற்பக் கலைஞனாக விளங்கினார். இவரது ஆற்றலை வியந்து பார்த்த எமது சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு "வளரும் சிற்பக் கலைஞன்" எனும் பட்டத்தையும் வழங்கி அவரது முயற்சிக்கு ஊக்கமளித்தனர். இத்துடன் நின்றுவிடாமல் வீட்டிற்குத் தேவையான பூச்சாடிகளை யும் விதம் விதமான வகையிலே செய்து அதனையும் ஒரு பகுதி வருமானமாகப் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு தொழில் ரீதியாக தன்னை வளப்படுத்திக் கொண்டவர் அல்வாய் தெற்கு பிச்சந்தோட்டம் குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி.தங்கவேல் இராசம்மா தம்பதியினரின் ஏக புத்திரி தங்கமலர் அவர்களை 1972ம் ஆண்டு கரம் பற்றினார். இத் தம்பதிகளின் இல்லற வாழ்வின் பயனாக நான்கு ஆண்குழந்தைகளையும் நான்கு பெண் குழந்தை களையும் பெற்றெடுத்தார்கள். அவர்கள் முறையே கல்பனா (சுவிஸ்), காஞ்சனா (சுவிஸ்), பிரசாத், பிரேந்திரா, பிரதாப், பிரவீனா, நிவேதனா, பிரதீப் ஆகியோராவர்.

திருமணத்தின் பின்னரும் கட்டடத்தொழில், சிற்பத் தொழிலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் எழுபதுகளின் நடுக்கூறில் கட்டைவேலி நெல்லியடி பனை அபிவிருத்திச் சங்க ஊழியராக நியமனம் பெற்று அக்காலப் பகுதியில் எமது கிராமத்தில் உதிரையடி வெட்டையோடு அண்டியிருந்த பனை வெல்லத் தொழிற்சாலையில் வெல்ல

உற்பத்தி பொறுப்பாளராகக் கடமையாற்றி வந்தார். இவர் இத் தொழிலில் ஏற்பட்ட அனுபவத்தின் வாயிலாக தனது வீட்டிலேயே மிகப் பெரிய அளவில் ஒரு பனை வெல்லத் தொழிற்சாலையை நிறுவி உற்பத்திப் பொருளை தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார். இது பருவகாலத் தொழில் என்பதால் இக்காலப் பகுதியில் இவர் ஓய்வு உறக்கமின்றிச் செயற்பட்டதை கூட இருந்து அறிந்து கொண்டவன் நான் (செ.க). போர்ச் சூழலால் நாட்டு நிலைமை மோசமடைந்து கொண்டிருந்த போது தனது வீட்டிலே பலசரக்கு கடையொன்றை ஆரம்பித்து அதனூடாக தனது குடும்பச் செலவினங்களை சீர் செய்து கொண்டிருந்தார். இவருடைய முயற்சியின் சிறந்த அறுவடையாக பார்க்கப்பட வேண்டியது மூன்று பிள்ளைகள். சுவீஸ் நாட்டிலும் ஏனைய இரண்டு பிள்ளைகள் அரச உத்தியோகத்தர்களாகவும் அதிலும் இளைய மகள் யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவராகவும் இருக்கிறார்கள் என்பதாகும். ஏனைய பிள்ளைகளும் ஊரோடு தொழிலோடு நல்ல வளமாக வாழ்ந்து வருகிறார்கள். இவையாவும் இக்குடும்பம் பட்டபாடுகளுக்கு கிடைத்த வெகுமதியாகும்.

இவர் தான் தன் குடும்பம் என்று வாழாது தான் சார்ந்த சமூக நிறுவனங்களிலும் தன்னை ஓராளாக இணைத்துச் செயற்பட்டார். இளமைப்பருவத்திலேயே மனோகரா ச.ச.நிலை யத்தின் நிர்வாக சபை உறுப்பினராக உள் நுழைந்தவர் அங்கு பெற்றுக் கொண்ட அனுபவத்தின் வாயிலாக செயலாளராக, விளையாட்டுச் செயலாளராக பொறுப்புக்களை எடுத்துச் செயற் பட்டார். இவரை எமது ச.ச.நிலைய உறுப்பினர்கள் செயலாளராக தெரிவு செய்வதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருந்ததை நான் அறிவேன். ஒன்று அவரிடமிருந்த செயற்பாட்டுத்திறன். இரண்டாவது அவரது கை எழுத்து. அவரது எழுத்தில் ஒரு நேர்த்தி இருப்பதை எமது தலைமுறையினர் எமது நிலைய செயலாளர் அறிக்கைப் புத்தகத்தை பார்த்து தெரிந்து கொள்ள லாம். இது மட்டுமல்லாமல் விளையாட்டுச் செயலாளராகவிருந்த இரண்டு தடவைகள் சித்திரா பூரணை இல்ல மெய்வல்லுனர் போட்டியை மிகச் சிறப்பாக நடாத்தி பலரினதும் பாராட்டை பெற்றுக் கொண்டவர். நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக எமது நிலையம் இரண்டு தடவைகள் இயங்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்ட போது தானே முன்வந்து, தன்னுடன் இணைந்து செயற்படக் கூடியவர்களை இணைத்து செயலாளர் பொறுப்பை ஏற்று செயற் பட்டவர். இந்த இடத்தில் தனக்கு கைகொடுத்தவர்களாக க.பாக்கியராசா, க.மகேந்திரராசா, சி.செல்வநாதன், சீ.இராசநாயகம் ஆகியோரின் பெயர் களை உச்சரித்தார்.

இவரது சகோதர்களான துரை ராசா, சின்னராசா, ஜெயரட்ணம்(கட்டி), செல்வரட்ணம் (அரி கனடா) அரிய நாயகம் ஆகிய எல்லோருமே எமது சமூக நிறுவனங்களுக்கு தங்களாலான பங்களிப்பை மிகச் சிறப்பாக வழங்கி வந்தவர்கள். குறிப்பாக எமது சன சமூகநிலைய விளையாட்டுக்களிலும், நிர்வாகப் பகுதியிலும் காத்திரத் தன்மையோடு செயற்பட்டவர்கள். எமது ஆலடியான் ஆலயத்திலும் இவர்களின் பங்கு இன்று வரை தொடர்ந்துள்ளதை யாவரும் அறிவர்.

ந.பாரதராசா அவர்கள் எமது ஆலயத்தின் 8ம் திருவிழா உபயத்தினூடாக அங்கத்துவ உரிமையைப் பெற்று அதனூடாக ஆலயத்திற்கான தனது பங்களிப்பை வழங்கி வருவதோடு, தனது பிள்ளைகள் அனைவரையும் அத் திருவிழாவில் உபயகாரராக இணைத்து செயற்பட்டு வரும் ஒருவராக இருக்கிறார்.

இவர் இலக்கியத்துறை, கலைத்துறை (நாடகம்) ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்தவராவார். இவர், அமரர்களான மா.நகுலேஸ்வரன், க.கமலேஸ்வரன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த "கார்மேகம்" என்ற கையெழுத்துச் சஞ்சிகையில் உருவகக் கதை ஒன்றை எழுதி அமரர் க.நடேசு (தெணியான்) அவர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டவர். அது மட்டுமல்லாமல் சகோதரன் ந.சின்னராசா, க.பரமானந்தன் ஆகியோரின் நெறியாள்கையில் சமூக நாடகங்களை நடித்து பெயரெடுத்துக் கொண்டவர். இவர் நடித்த நாடகங்களில் "சாத்திரி சரவணை", "இவ்வளவு தான் உலகம்" என்பன இன்றும் மக்கள் மத்தியில் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன என்பது மிகை அல்ல.

இவருடை குடும்பங்களைப் பொறுத்த வரையில் இவருடைய சகோதரர்கள் அனைவரும் காலத்துக்கு காலம் உதைபந்தாட்ட கோல் காப்பாளர்களாகவிருந்து எமது கழக வெற்றிக்கு துணைபுரிந்தவர்கள் ஆவார். இவர்களில் ந.ஜெயரட்ணம், க.செல்வரட்ணம் ஆகியோர் தலை சிறந்த கோல் காப்பாளர்களாக பெயரெடுத்துக் கொண்டவர்கள். இவர்கள் வழியிலே ந.பாரதராசாவின் மகள் வழிப் பேரன் ஸ்ரீரங்கநாதன் கிருவரன் சுவிஸ்நாட்டில் "இளம் சிறுத்தைகள்" விளையாட்டுக் கழக கோல் காப்பாளராக விளையாடி அண்டை நாடுகளுக்கும் சென்று பல வெற்றிப் பதக்கங்களை பெற்றிருக்கின்றார்.

இவரும் இவரது வம்சமும் எமது சமூகத்தில் நீண்டு நிலைத்து நிற்க வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.



# காலம் கரைத்த மனப்பதிவுகள் –5

கலாநிதி த. கலாமணி

நான் ஆரம்பக் கல்வியைத் தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் எவரையும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு விடுவதில்லை. நான் ஐந்தாம் வகுப்புக்கு வந்ததும் எனது ஐயா பாடசாலை அதிபரிடம் சென்று என்னை "ஸ்கொலர்ஷிப்" சோதனை எடுக்க விடுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அதிபர் மறுத்து விட்டார். "மாதாந்தம் உபகாரப்பணம் முப்பது ரூபா கொடுப் பார்கள். அத்தோடு நெல்லியடி மத்திய மகாவித்தியால யத்தில் தான் படிக்க வேண்டும். அவனை வேண்டுமானால் ஹாட்லிக் கல்லூரிக்கு விடுங்கள் எனச் சொல்லி, "உந்தப் பிச்சைக் காசுக்கு ஆசைப்பட வேண்டாம்" என்றும் சமாதானப்படுத்தினார். ஐயா அதற்குச் சம்மதிக்கவில்லை. ஸ்ரீலங்கா வித்தியாசாலையிலிருந்து விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பெற்றுவந்து எனது கல்லூரி அதிபரிடம் கொடுத்தார். அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. என்னுடன் இன்னும் மூன்று பேரைச் சேர்த்து விண்ணப்பித்தார்.

அப்போது, ஸ்கொலர்ஷிப் முடிவுகள் உடனடியாக வெளியாவதில்லை தாமதித்துத் தான் வெளிவரும். ஆறாம் வகுப்பின் முதலாவது தவணை இறுதியில் ஒருநாள் தேவரையாளிக் கிராமத்தைச் சேர்ந்த க.யோகராஜா என்ற மாணவன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய "நோட்டிஸ் போர்ட்"டில் ஸ்கொலர்ஷிப் பரீட்சையில் சித்தியடைந்தவர் களின் பெயர்ப்பட்டியல் இடப்பட்டிருப்பதாகவும் அதில் என் பெயரும் இருப்பதாகவும் வீட்டுக்கு வந்து சொன்னான். இதனால் தேவரையாளி இந்துக்கல்லூரியிலிருந்து ஸ்கொலர்ஷிப் பரீட்சையில் சித்தி பெற்ற முதல் மாணவன் ஆனேன்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்குச் செல்வதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்ததில் வீட்டில் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அம்மா மட்டும் சற்று சந்தோஷக் குறைவாக இருந்தார். அங்கு பல இடத்துப்பிள்ளைகளும் வருவார்கள். சாதிவேறுபாடு காரணமாக என்னை ஒதுக்கி வைத்து விடுவார்களோ என்று கவலைப்பட்டு, "யாரும் எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டால் அல்வாய் குமிழடியிலிருந்து வருவதாகச் சொல்" என்று புத்திமதி கூறினார்.

பாடசாலையில் சேர்ந்த முதல்நாளிலேயே என் அருகே அமர்ந்திருந்த மாணவன் எனது ஊரை விசாரித்தான். நான் அல்வாய் என்றேன். அதற்கு அவன் "நானும் அல்வாய் தானே, நீங்கள் அல்வாயில் எங்கே?" என்று கேட்டான். நான் குமிழடி என்றேன். நானும் குமிழடி தானே என்று அவன் கூறினான். நான் ஒன்றும் பேச வில்லை. அவனும் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை.

மறுநாள் பாடசாலைக்கு வந்ததும் "உங்களுடைய சொந்தக்காரர் ஒருவர் நேற்றிரவு கிணற்றில் விழுந்து செத்துவிட்டாரா?" என்று கேட்டான். "அது முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்தவர்; நான் குமிழடியிலிருந்து கந்தவனங்கோயிலுக்குச் செல்லும் தெருவில் இருக்கிறேன்" என்று சொன்னேன். மெல்ல மெல்ல என்னை எல்லோருக் கும் தெரிந்துவிட்டது. மரவேலை கற்பிக்கும் ஆசிரியர் "நீ வதிரி தானே?" என்று கேட்டார். "இல்லை, நான் அல்வாய்" என்று சொல்லி மறுத்துவிட்டேன். வகுப்பில் முதல் மாணவ னாக விளங்கியமையால் மாணவர்களும் ஆசிரியர்களும் என்னிடம் அதிகம் வேறுபாடு காட்டவில்லை. நான் சங்கீதப் போட்டி, பேச்சுப்போட்டி என்பவற்றில் கலந்துகொண்டு, கல்லூரியிலும் மாவட்ட மட்டப்போட்டிகளிலும் பரிசுகள் பெற்றேன். நாளடைவில் பாடசாலை நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. பாடசாலைக் கிணற்றில் நாங்களும் தண்ணீர் அள்ளிக் குடிக்க ஆரம்பித்தோம். நான் வகுப்பு மாணவர் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டேன். உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோது, பாடசாலை மாணவர் தலைவராக (Prefect) ஆசிரியர்களாலும் இளங்கோ இல்ல விளையாட்டுத் தலைவராக ஏகமனதாக மாணவர்களாலும் தெரிவு செய்யப்பட்டேன். நான் விரிவுரையாளராக வந்ததும் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிக்கும் பரிசளிப்பு விழாவுக்கும் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டேன். இன்றும் எனது கல்லூரியில் எனக்கு ஒரு மதிப்பான இடம் இருக்கிறது.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்து விரிவுரையாளராக வந்த போது, நான் தங்கியிருந்த வீட்டின் முன்னாலிருந்த "குவாட்டர்ஸில்" உள்ள ஒரு பல்கலைக்கழக தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் "குறிஞ்சிக்குமரன்" கோயிலில் அறிமுகமானார். என்னுடன் மரியாதையாகப் பழகி நட்புறவுடன் நடந்து கொள்வார். நான் கந்தசஷ்டி விரதம் இருப்பதை அறிந்து, பாரணப்பூஜைக்குச் சாப்பிட வருமாறு அழைத்தார். மறுக்க முடியவில்லை. இரண்டு வருடங்களாக அவர் வீட்டில் தான் கந்தசஷ்டிப்பாரணை.

நான் 1978 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திற்கு விரிவுரையாளராக வந்த போது ஒருநாளில் என்

வீட்டுக்கு அந்த நண்பர் வந்தார். நெல்லியடியில் இறங்கி ஓட்டோவில் வந்தார். வீட்டிலிருந்து என்னுடனும் ஐயா, அம்மாவுடனும் உரையாடி மதிய உணவு உண்டார். வீட்டிலிருந்து புறப்படும்போது, "M.P.இராஜலிங்கத்தின் ஊரும் இது தானே?" என்று கேட்டார். நான் அவரை மேலும் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. "அவர் என்னுடைய மாமா தான்" என்றேன். அவருக்குச் சங்கடமாகப் போய் விட்டது. தாங்கள் சைவம் என்றும் ஆசாரமிக்க இடத்திலாயினும் தனது தங்கைக்கு திருமணம் செய்ய இருப்பதாகவும் அதனால் எனது வீட்டையும் ஒரு முறை பார்க்க வந்ததாகவும் தயங்கித் தயங்கிச் சொன்னார். நான் சிரித்துக் கொண்டே "ஒரு குறையும் இல்லை" என்று சொன்னேன். அதன் பின்பும் யாழ்ப்பாணத்தில் அவர் சந்தித்த வேளைகளில் எல்லாம் நட்பாகவே இருந்தார். அப்போது MP இராஜலிங்கம் மாமா எங்களுக்கு ஒர் அடையாளமாக இருந்தார்.

இன்றும் சாதி ஒடுக்குமுறை முற்றாக ஒழிந்துவிட வில்லை. கல்வி வழங்கும் உயர் நிறுவனங்களிலும் கூட கண்ணுக்குப் புலப்படாத வகையில் இந்த ஒடுக்கு முறைகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. எங்களைச் சார்ந்தவர்கள் உயர் பதவி நிலைகளுக்கு வந்து விடுவார்களோ என்ற அச்சம் அவர்களிடம் உள்ளது. அவ்வாறு ஒரு சிலர் மிகவும் உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டால் அவர்களுக்கெதிரான புகார்க்கடிதங்களும் அவர்களை இனங்காட்டும் முறைப்பாடுகளும் அனுப்பப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.


இன்று கல்வித்திணைக்களத்திலுள்ள பல உயர் உத்தியோகத்தர்களும், கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களிலுள்ள பலவிரிவுரையாளர்களும் என்னிடம் உயர்பட்டப்படிப்பைக் கற்றவர்கள். இன்றும் என்னிடம் விசுவாசமாகவே இருக்கிறார்கள். அல்வாயைச் சேர்ந்த தமது மாணவர்களிடம் "நீங்கள் கலாமணி சேரின் ஊரா?" என்றே கேட்கிறார்கள். அவர்களுக்கு என் சுகத்தைப் பற்றி அறிந்து கொள்ள மிகுந்த விருப்பம். ஆனால் எங்களுடைய ஊர்ப்பிள்ளைகள் தங்களைத் தெரிந்துவிடுமோ என்று பயந்து மழுப்பலான கதைகளைச் சொல்கிறார்கள் அல்லது அவர் எங்களுடைய இடத்திலிருந்து தூரத்தில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஒரு பெண்விரிவுரையாளர் என்னிடம் ஒருமுறை நேரிலேயே சொல்லிக் கொண்டார்: "கலாமணி சேர் யாரென்று உங்களுடைய ஊர்ப்பிள்ளைகளுக்குத் தெரியவில்லை. ஏன் தயங்குகிறார்கள் என்பது எங்களுக்கு விளங்குகிறது. ஆனால் எங்கள் எல்லோருக்கும் நீங்கள் ஒரு Role Model ஆனால் உங்களுடைய அடையாளம் இந்தப் பிள்ளைகளுக்கு விளங்கவில்லை; அது தான் கவலை சேர்" என்றார். சாதிய ஒடுக்குமுறைகளை நாம் கற்ற கல்வி எங்கும் பின் தள்ளி விடும் என்பது என் நம்பிக்கை. கல்வியே எங்கள் மூலதனம் என்பதை மனதில் கொண்டு எம்மவர்கள் கற்கவேண்டும். நாம் கற்கும் கல்வியே எந்த இடத்திலும் துணிச்சலாக செயற்படுவதற்கு காரணமாக அமைந்தது. கற்றலை எம்மவர்கள் சிரத்தையுடன் மேற் கொள்ள வேண்டும்.



வடமராட்சி லீக்கினால் நடாத்தப்பட்ட Futsal சுற்றுப் போட்டியில் எமது மனோகராவின் Un- 18 அணி நவிண்டில் கலை மதி அணியுடன் இறுதிப் போட்டியில் மோதி 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்று முதலாம் இடத்தைப் பெற்று ஊருக்கு பெருமை சேர்த்துள்ளது. சிறந்த கோல்காப்பாளர் விருது சிவசங்கர் அபிராம் அவர்களுக்கும், ஆட்டநாயகன் விருது செல்வேஸ்வரன் தீபக் அவர்களுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



வடமராட்சி லீக்கினால் நடாத்தப்பட்ட Futsal சுற்றுப் போட்டியில் மனோகரா A அணி நவிண்டில் கலைமதியுடன் இறுதி ஆட்டத்தில் பங்கு பற்றி 1:0 என்ற கோல் கணக்கில் இரண்டாம் இடத்தைப் பெற்று ஊருக்கு பெருமை சேர்த்துள்ளது. வளர்ந்து வரும் வீரனுக்கான விருது வசந்தரூபன் சுயாந்த் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



# இளைப்பாறிய சாலைப் பரிசோதகர் அமரர் திரு பொன்னையா துரைராசா(பீற்றர்)


-க.பரணீதரன்

பொன்னையா துரைராசா அவர்கள் பீற்றர் என அன்பாக அனைவராலும் அழைக்கப்பட்டு வந்தவர். இவர் அல்வாய் மனோகராவின் உல்லியவத்தையில் வாழ்ந்து வந்த பொன்னையா முத்துப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த பிள்ளையாக 1940.2.25 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு சகோதரங்களாக சிவபதியம்மா, சிவமலர் கிடைக்கப் பெற்றார். அன்புடனும் பண்புடனும் இவர்கள் வளர்ந்து வந்தார்கள். இவர் தனது ஆரம்பக்கல்வியை தேவரையாளி இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். உயர் கல்வியை வதிரி கரவெட்டி திரு.இருதயக்கல்லூரியில் பெற்று எஸ்.எஸ்.சி வகுப்பில் சித்தியடைந்தார். நிமிர்ந்த உயரமான தோற்றத்தை உடையவர்; மாநிறத்தவர்.

பாடசாலைக்காலத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரராக திகழ்ந்த இவர் அநுராதபுரம் சென்யோசேப் கல்லூரி வரை சென்று உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடி பாராட்டுப் பெற்றார். பிரபல உதைபந்தாட்ட வீரர் பீற்றர் ரணசிங்கவின் தோற்றத்தை ஒத்த சாயல் உடையவராக விளங்கியமையாலும் அவரைப்போன்ற அசைவுகளுடன் உதைபந்தாட்டத்தை விளையாடியமையாலும் இவரை எல்லோரும் அன்பாக பீற்றர் என அழைக்கலானார்கள். மனோகரா விளையாட்டுக்கழகத் திற்கு முதன்முதலாக கழக “ஜேசி” கிடைக்கப்பெற்ற போது அதனை எமது ஆலய முன்றலில் முதன்முதலாக அணிந்து அழகு பார்த்தவர் பீற்றர் என எம்மவர்கள் அனைவரும் அறிவார்கள். மனோகராவின் முன்னணி உதை பந்தாட்ட வீரராக திகழ்ந்த தோடு, உதைபந்தாட்ட ரசனை மிகுந்தவராகவும் விளங்கினார்.

இவருக்கு 1963 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்துச் சாலைப்பரிசோதகர் பதவி கிடைத்தது. மூதூர், கொழும்பு, அனுராத புரம், கிளிநொச்சி போன்ற இடங்களில் பணியாற்றிய இவர் இறுதியாக பருத்தித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றார். 35 ஆண்டுகளாக இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணி யாற்றி இலங்கை போக்குவரத்துச் சபையின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர். பணியிடத்தில் எல்லோருடனும் அன்புடன் பழகி வந்த இவர் எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தார். இவரது நேர்மையும் திறமையுமே இதற்கு காரணமாய் அமைந்தன எனலாம்.

முள்ளாவத்தையைச் சேர்ந்த மயிலு சிவக்கொழுந்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி திரவியமலர் அவர்களை 1977.02.14 இல் திருமணம் செய்து கொண்டார். இவர்களின் திருமண பந்தத்தின் பேறாக இவர்களுக்கு துஷ்யந்தி என்னும் மகள் பிறந்தார். ஊரின் மீது அதிக பற்றுடையவராகவும் ஊர் சார்ந்த கருமங்களில் தன்னாலான பங்களிப்புகளை வழங்கியும் வந்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளை யார் ஆலயத்தின் 2003-2004 ஆம் ஆண்டில் செயலாளராகப் பணியாற்றினார். ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட யாப்பு குழுவில் இவரும் அங்கத்துவம் வகித்தார் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையாரில் பல்வேறு சரியைத் தொண்டுகளை தன் அந்திம காலம் வரை ஆற்றினார். தினமும் கோயில் சென்று வழிபட்டு வந்தார். 9 ஆம் திருவிழா(தேர்) உபயகாரராகவும் விளங்கினார். கட்டுத்தேர் தொடக்கம் சித்திரத்தேர் உருவாக்கம் வரை தன் பங்கை மிகச் சிறப்பாக ஆற்றினார். மனோகரா சனசமூக நிலையத்தின் செயலாளராகவும் நீண்டகாலமாக நிர்வாக உறுப்பினராகவும் இருந்தவர். ஊரில் உள்ள ஏனைய நிறுவனங்களிலும் அங்கம் வகித்ததோடு ஊர் அபிமானம் மிக்கவராக விளங்கினார். போர்காலத்தில் எம்மக்கள் அவதிப்பட்ட சமயத்தில் இவர் கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க கிளையின் உறுப்பினராக இருந்த காரணத்தால் எம்மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார். இவரது மகள் இன்று பல்கலைக்கழக பட்டம் பெற்று அபிவிருத்தி உத்தியோகத்த ராக கடமையாற்றுகின்றார். பேரப்பிள்ளைகளும் கல்வியில் சிறந்து விளங்குகின்றார்கள். ஊரில் பலருடைய திருமணங்களை நடாத்தி வைப்பதற்கு முன்னின்றவர். எல்லோருடனும் அன்பாக பழகக்கூடியவர் என்பதுடன் நகைச்சுவை யாகவும் பேசக் கூடிய இயல்புடையவர். ஆன்மீக வழி நின்று இறைவனை தரிசித்து வாழ்ந்து வந்தவர். நிதானமான பேச்சின் காரணமாக இவர் எல்லோராலும் மதிக்கப்பட்டார். இனிமை யான வாழ்வை வாழ்ந்த துரைராசா அவர்கள் 02.10.2016 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவரது மறைவையொட்டி “சொல் புதிது“ என்னும் துறைவாரிச் சொல் தொகுதி நான்காவது பரிமாண வெளியீடாக வெளியானது.




(உசாத்துணை - அமரரின் கல்வெட்டு)



**அஞ்சலி**
**அமரர் யோகதாஸ் அசோக்காந்**
**14.04.1980 - 08.07.2022**

அமைதியான முறையில் நாற்பத்து இரண்டு வருடங்கள் இம் மண்ணிலே வாழ்ந்து தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொண்ட யோகதாஸ் அசோக்காந் அவர்களின் இழப்பானது எமது ஊரை உறைய வைத்த பெரும் துயரமாகும்.

இவர் அல்வாய் மனோகரா கவிஞர் செல்லையா வீதி "அம்பிகை" இல்லத்தில் வாழ்ந்து வருபவர்களான திரு.திருமதி. யோகதாஸ் ஜெகதாம்பிகை தம்பதிகளின் நான்காவது புத்திரன் ஆவார். ரஜனிகாந், அருண், ஜான்சிராணி, றபேக்கா, கீர்த்தனா, ஆகியோர் இவரின் உடன் பிறப்புக்களாவர். 14.04.1980 இல் இப் பூமிப்பந்துக்கு காலடி எடுத்து வைத்தவர், அல்வாய் மனோகரா முன்பள்ளியில் தனது கல்விக்கான முதல் காலடியை எடுத்து வைத்தார். ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றார்.

மிக அமைதியான சுபாவம் கொண்ட இவர் நல்ல நகைச் சுவையாளன். கதைக்காதவர்களையும் தனது சிரிப்பால் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்டவர். எவருடைய மனமும் புண்பட்டுப் போகாவண்ணம் பேசுகின்ற நல்ல பண்பாளன். வலது கை கொடுப்பதை இடது கை அறியாதிருக்க வேண்டும் என்ற எமது முன்னோர்களின் பண்பட்ட வார்த்தைக்கமைய வாழ்ந்து காட்டிய வள்ளல் தன்மை கொண்டவன்.

அமைதியான முறையில் தனது கல்வி நடவடிக்கையை மேற் கொண்டவர் க.பொ.த உயர்தரத்திற்குப் பின்னராக "Diploma in fissharies" (ஒரு வருட) கற்கை நெறியை மேற்கொண்டு 2003ம் ஆண்டு அக் கற்கை நெறியை பூர்த்தி செய்தார். கற்றலை குறிக்கோளாகக் கொண்டியங்கியவர். 16.11.2009 இல் யாழ்.குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரிய நியமனத்தைப் பெற்று ஆசிரிய சேவைக்குள் காலடி எடுத்து வைத்தார். அங்கு கற்பித்துக் கொண்டிருக்கும் காலத்தில் 2012ம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இணைந்து ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராக 2014ம் ஆண்டு வெளியேறினார். அதே காலப் பகுதியில் (2014) யாழ் நாகர் கோயில் மகாவித்தியாலயத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்று மாணவர்கள் மத்தியிலும் சக ஆசிரியர்கள் மத்தியிலும் தனக்கென ஒரு தனியிடத்தை பதித்துக் கொண்டார். இத்துடன் தனது கற்கை நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளாது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக இளங் கலைமாணி (B.A) கற்கை நெறியினை மேற் கொண்டு 2018 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாக வெளியேறினார். இவ்வாறு தனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டவருடைய சிறப்புக்கள் யாவும் அவர் காலமானதன் பின்பே பலருக்கும் தெரிய வந்தது என்றால் அவரது அமைதியான சுபாவத்தை நாம் உணர்ந்து கொள்ள வெகு நேரமெடுக்காது.

மிகவும் தன்னடக்கத்துடன் செயற்பட்டவர். திருமணகாலம் பொருந்திவர அல்வாய் மனோகராவைச் சேர்ந்த திரு.திருமதி.ஜெயவீரசிங்கம் இரத்தினகுமாரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்தி இந்திராவை 02.09.2011 இல் கரம்பற்றினார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக "அஸ்விகா" என்ற பெண் குழந்தையை பெற்றெத்தனர்.

மனைவி பிள்ளை என்று குடும்பத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தவர் எமது சமூக நிறுவனங்களிலும் தனது பங்களிப்புக்களை செலுத்தத் தவறியதில்லை. எமது (மனோகரா) கழக உதைபந்தாட்ட வீரனான இவர் எமது சன சமூக வளர்ச்சிக்கான காத்திரமான பங்களிப்புகளை வழங்கியதோடு, எமது ஆலய வளர்ச்சிக்கான செயற்பாடுகளிலும் ஐந்தாம் திரு விழா ஊடாக இணைந்து செயற்பட்டு வந்தார். இவற்றுடன் மட்டும் நின்றுவிடாமல் கற்பித்த பாடசாலைச் சமூகத்திலும் தனது காத்திர மான பங்களிப்பால் நல்லபெயரெடுத்ததனை அச்சமூகம் அன்னாரது இறுதி நிகழ்வின் போது சிந்திய கண்ணீர் சாட்சிப்படுத்தி நிற்கிறது.

இவரின் கற்பித்தல் அனுபவம், நிர்வாகத்திறன் ஆகியவை அவர் பணியாற்றிய பாடசாலையில் பிரதி அதிபராக அமர்வதற்கு ஏதுவாக அமைந்தது. கல்வி தாகம் கொண்டவர் மேலும் தனது கல்வித்தரத்தை உயர்த்தவென எண்ணி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டு இறுதி நாள்வரை கற்கை நெறி சார்ந்த விடயங்களை கற்றுக் கொண்டிருந்தார். இக் காலப்பகுதியில் ஏதிர்பாராத விதமாக ஏற்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 08.07.2022 இல் இவ்வுலகை விட்டு நீங்கினார். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஆலடியானை வேண்டிக் கொள்வதோடு அன்னாரின் மனைவி பிள்ளை, பெற்றோர்கள் உடன் பிறப்புக்கள் மற்றும் அனைவருக்கும் "நாங்கள்" எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- செல்லக்குட்டி கணேசன்

---



**அஞ்சலி**
**சிவதாசன் - சிவபாக்கியம்**
**1940.12.15 - 7.10.2022**

சிவபாக்கியம் அவர்கள் அல்வாயைச் சேர்ந்த வைரமுத்து தங்கம்மா தம்பதிகளுக்கு மகளாகப் 1940.12.15 இல் பிறந்தார். இவருக்கு சகோதரங்களாக சிவசக்தி, சிவபாதவிருதயர், சரஸ்வதி ஆகியோர் வாய்க்கப் பெற்றார். வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலையில் கல்வியைப் பெற்றிருந்த இவர் அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர், புதுக்குளங்கரைப்பிள்ளையார் ஆலயத்தில் அதிக பக்தி கொண்டிருந்தார். சிவதாசன் அவர்களை துணைவராகக் கொண்ட இவர் விஜயஸ்ரீ, ரத்தின ஸ்ரீ, வேல்முருகா, தயாவதி, சுமித்ரா, பாக்கியவதி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்தார். சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தன் குடும்பத்தை வழி நடாத்திச் சென்றார். காத்தவராயர் ஆலயத்தின் 7 ஆம் திருவிழாவான சப்பரத்திருவிழாவின் உபயகாரரும் திருவெம்பாவையின் 7 ஆம் நாள் உபயகாரருமாக விளங்கியவர். பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என பலருடனும் அன்பாக பழகி வந்தார். இறை நம்பிக்கையோடு வாழ்ந்த இவர் இறைவனின் பாதாரவிந்தங்களை 2022.7.10 அன்று அடைந்தார். அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- பரணீ**



**அஞ்சலி**
**சிவராசா தவராணி**
**1957.12.17 - 2022.07.16**

அல்வாய் சின்னப்பாதி குறிச்சியில் வாழ்ந்த தம்பிமுத்துச்சாமி தங்கரத்தினம் தம்பதிகளுக்கு மகளாக 1957.12.17 இல் தவராணி பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியை யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். 1972 ஆம் ஆண்டு சிவராசா அவர்களைக் கரம்பிடித்தார். இவர்கள் சுபாஷினி, சஜீவா, தவேந்திரன், சுபேந்திரன், சுரேந்திரன் ஆகிய பிள்ளைச் செல்வங்களை பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார். 1998-2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணவரின் தொழில் நிமிர்த்தம் கொழும்பில் வசித்தார். இதன் காரணமாக சிங்கள மொழியையும் பேசக் கூடிய வல்லமை பெற்றிருந்தார். இன்பமான வாழ்வை வாழ்ந்திருந்த இவர் 2022.07.16 அன்று இறைவனது திருப்பாதங்களை சென்றடைந்தார். அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பரணீ

**நிகழ்வுப் பதிவு**

அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தின் ஆனி உத்தரப் பொங்கலும் காத்தவராயன் கூத்தும் 2022.07.05 ஆம் திகதி நடைபெற்றது. செந்தமிழ்ச்சோலை அரங்காற்றுகைக் கழகத்தின் திரு க.ரஜீவன் நெறியாள்கையில் காத்தவராயன் கூத்து இரவு 8 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடைபெற்றது. தொடர்ந்து 12.30 மணியளவில் வழுந்து கட்டலுடன் பூசை ஆரம்பமாகி 6 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு பூசைகள் இடம்பெற்றன.

- பரணீ



**நிகழ்வுப் பதிவு**

அல்வாய் தனத்தியவத்தை ஞான வைரவர் ஆலய வருடாந்த ஆனி உத்தரப் பொங்கல் 05.07.2022 செவ்வாய் இரவு 11.00 மணியளவில் வழமைபோல் வழுந்து கட்டலுடன் ஆரம்பமாகியது. 06.07.2022 காலை 6.00 மணியளவில் அபிஷேக ஆராதனை பூசை நிகழ்வுடன் நிகழ்வானது 7.30 மணியளவில் ஞான வைரவர் அருளால் சிறப்பாக நிறைவெய்தியது.

-செல்லக்குட்டி கணேசன்

**நிகழ்வுப்பதிவு**

வருடந்தோறும் ஆடி பிறந்து வருகின்ற முதல் வெள்ளிக்கிழமை நடைபெற்று வருகின்ற அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் அண்ணமார் பொங்கல் 22.07.2022ம் திகதி பரிபாலன சபையினரின் வழுந்து கட்டலுடன் ஆரம்பமானது. பூசை நிகழ்வானது ஆலய நித்திய குருக்கள் குகன் ஐயாவினால் பி.ப.5.00 மணிக்கு ஆரம்பமாகி ஆலடியான் திருவருளால் நிறைவாக நிறைவெய்தியது.

- செல்லக்குட்டி கணேசன்

**உதைபந்தாட்டம்**

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடாத்திய வடமராட்சி மற்றும் பருத்தித்துறை லீக் அணிகளை உள்ளடக்கிய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் எமது கழகம் சக்கோட்டை சென்சேவியர் அணியை எதிர்த்து விளையாடி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று ஊருக்கு பெருமை சேர்த்துள்ளது. போட்டியின் ஆட்ட நாயகனாக முன்கள வீரன் வ.சுயாந்த் தெரிவு செய்யப்பட்டார். அவர் 4 கோல்களை அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



குறுங்கதை - 1

# பலசாலி

■ சயானந்தன்

அதோ தெரிகின்றதே!

அந்த வளவுக்குள் இப்பொழுதுதான் ஒரு வீட்டுக்கு அத்திவாரமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையத்துக்கு அருகே மரவர்க்கத்தைச் சேர்ந்த இரு இன மரங்கள் வானை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தன. அவற்றிலொன்று வேப்பமரம் அடுத்தது பனைமரம்.

வேப்பமரம் உயர்ந்து அகன்று பருத்து சடை சடையாய் இலைபரப்பி ஜீவராசிகளுக்கு நிழலை வழங்கிக் கொண்டிருந்தது. அந்த இறுமாப்பில் அது வலிந்து சென்று பனை மரத்துடன் மோதிக் கொண்டிருந்தது. அடே! அற்பப் பயலே! உன்னுடைய நிழலில் எத்தனை பேர் களை போக்குகின்றனர். உயரமாக உள்ளதனால் என்னை விட உயர்வு என்ற எண்ணமோ என்றவாறு கேள்விக்கணை களைத் தொடுத்துக் கொண்டிருந்தது, அப்பொழுது அந்த மரத்துக்கு கீழ் நின்று கொண்டிருந்த மேசன் கூலியாட்களில் ஒருவன் பனைமரத்தின் கீழ் நின்று கொண்டிருந்த தன் சகபாடியைப் பார்த்து "அடே பகைவர் உறவையும் பனை நிழலையும் நம்பலாமா?" என்று கூறித் தன்னருகே அழைத்தான். இதனைக் கேட்டதும் வேம்பு ஒரு தரம் தன் சடையை ஆட்டி, அசைத்து இந்த வார்த்தைகளை தனக்குக் கிடைத்த பாராட்டாக எண்ணி இரைச்சலாக ஏளனம் செய்து கொண்டிருந்தது.

ஏளனங்களை, இளக்காரமாகப் பேசியதைத் தாங்க முடியாத பனை மரம் தன் துரதிஷ்டத்தை நினைத்து உள்ளம் புழுங்கிக் கொண்டிருந்தது. தன் அழகில்லாத தோற்றம், காசுப் பெறுமதியில் வேம்பை விட குறைந்த பெறுமதி என்பன அதனைத் தாழ்வு மனப்பான்மைக்கு உட்படுத்தி விட்டிருந்தது. அப்பொழுது கோடாலியுடன் வந்தவர்கள் வேம்பையும் பனை மரத்தையும் தறித்தனர். சிறிது நாட்கள் சென்றன. வேப்பமரம் ஜன்னல், நிலை, கதவாக உருமாறியும், பனைமரம் சிலாகை வளை என்பனவாகவும் பரிணமித்து அந்த வீட்டில் அங்கமாகிக் கொண்டிருந்தன.

ஜன்னல், நிலை, கதவாக வேம்பு மாற்றமடைந்த போதிலும் அதன் கர்வம் முன்னை விடப் பன்மடங்கு அதிகரித்திருந்தது. தச்சுத் தொழில் விற்பன்னர்களின் கைத்திறனினால் பூரணத்துவம் அடைந்த வேம்பினால் சும்மா இருக்க முடியவில்லை. மீண்டும் பேசியது. "கத்தரித்து விட்ட சிறுவர்களின் தலைமயிர் போல் இருக்கிறாயே! இதுவா உன் அழகு, இல்லையென்றால் எனக்கு திருஷ்டி பார்த்து கட்டிவிட்ட நீத்துப் பூசணிக்காயோ?" என்று மேலே கூரையைப் பார்த்துக் கூறி மேலும் தொடர்ந்தது. "என்ன முழித்துப் பார்க்கிறாய்? இந்த வீட்டுக்காரன் உன்பலத்தை நன்றாக அறிந்து விட்டான். வீட்டுக்குப் பாதுகாப்பாக என்னைத்தான் கதவாகப் போட்டானே ஒழிய, வீட்டுக்குப் பலகையாய் அரிந்து உன்னையா போட்டான். ஏ மண்டுகமே! இன்னுமா உன் பலம் உனக்குப் புரியவில்லை." என்று பனைமரம் எரிச்சலுறக் கூடிய முறையில் அதன் தன்மானத்தை இழுத்துப் பேசியது.

தாங்கித் தாங்கி, தாளாத நிலையில் தலையில் அடித்தது போல் தன் பலமெல்லாம் பொங்கிப் பிரவாகித்த அக்கினியாய் வெடித்தது பனைமரம்.

"எனதருமைச் சகோதரனே உன் அறியாமையை எண்ணி உன் வர்க்கத்திலொன்றான நான் உனக்காக வெட்கப்படுகிறேன். பலம் பலமென்று பகற் கனவு கண்டியே, எது உன்பலம்? ஜன்னலைப்பார், நிலையைப்பார், கதவைப்பார் உன்னை மூட்டு மூட்டாக இறுகப் பின்னிப் பிணைந்து நிற்பது யார்? அது உன் சொந்தக்காரனா? இல்லை என் உடன் பிறப்பில் ஒன்று. பனை மரத்தால் குச்சியாகி இறுக்கமாக நிலைகுலையாமல் உன் அழகை நீடித்து நிற்பது உன் சோதரனே. இப்போது புலப்பட்டதா என்பலம்? அழகு, பலம் என்று ஆர்ப்பரித்து நின்றாயே இப்போது புரிந்ததா" என்று கூரை மரம் கூறியதும் திடுக்குற்ற வேம்பு தன்மேனியின் வடிவத்தைப் பார்த்தது, அப்போது ஆங்காங்கே, பொருத்துக்குப் பொருத்து ஆணிபோல் நின்ற பனங்குச்சி விழித்துப் பார்ப்பது போல் இருந்தது. அந்த விழியின் கூர்மையினைத்தாங்காத வேம்பு தன் பலவீனத்தை எண்ணி தரையைப் பார்த்துக் கொண்டது.

கஜேந்திரா நிரூபினி தம்பதியினருக்கு 13.07.2022 அன்று சிபி நிருஷ்வின் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

துவிகரன் சாலினி தம்பதியினருக்கு 01.07.2022 அன்று அஸ்னா என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

எம்மவர்கள் சிறுகதை - 8

# பிறக்குமா நமக்கொரு விடிவு காலம்...?

■ வி.எழில்நிலா

சுந்தரம் படுத்த படுக்கையில் இருந்து கொண்டே தன் மனைவியை "காமாட்சி... காமாட்சி.." என்று அழைத்தான்.

சுந்தரம் காமாட்சியை அழைத்தது அவளுக்குக் கேட்க வில்லை என நினைத்துச் சுந்தரம் மீண்டும் காமாட்சியை அழைத்தான்.

"அம்மா சந்திராக்கா வீட்ட போயிட்டா. ஏன் அம்மாவைக் கூப்பீட்டனீங்கள்?" என்று சுந்தரத்தை மகள் மதுரா கேட்க,

"ஓட்டையளுக்கிளாளை தண்ணீர் சிந்திக் கொண்டிருக்கு அந்த இடங்களைப் பார்த்துப் பாத்திரங்களை வைச்சுவிடு" என்றான் சுந்தரம்.

சந்தரத்தின் வீடு மண்ணால் கட்டப்பட்டுத் தென்னங்கிடுகு களால் வேயப்பட்ட ஒரு சிறிய குடிசை. அதிலும் ஓட்டை வீடு ஒன்பது வாசல் என்பது போல ஓட்டைகள் நிறைந்து காணப்பட்டிருந்தன. அந்தக்குடிசை வெயிற் காலங்களில் தாக்குப் பிடித்தாலும் மழை நேரங்களில் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்து விடும்.

சுந்தரத்தின் அந்தக் குடிசையில் ஓட்டைகள் நிறைந்திருக்கும் அளவிற்குப் பாத்திரங்கள் இல்லை. குடிசையில் பெரிதாக ஒழுகும் இடங்களில் மட்டும் மதுரா பாத்திரங்களை வைத்து சமாளித்தாள்.

மதுரா பாத்திரங்களை வைத்துக் கொண்டிருக்கவும், காமாட்சி மழையில் நனைந்தபடி வீட்டிற்குள்ளே நுழைந்தாள். சுந்தரம் இரண்டாம் தடவை அவளை அழைத்தது, அவளின் காதில் விழுந்தது போலும்,

"ஏனப்பா கூப்பிட்டனீங்கள். நான் சந்திராக்கா வீட்டில பாத்திரம் கழுவிக் குடுத்திட்டு வாறன் அதால இண்டைக்கு ஐம்பது ரூபா கிடைச்சிது. இதை வைச்சு எப்படியும் உங்களுக்கு மருந்தும், சின்னவனுக்கு ஒரு கொப்பியும் வாங்கிடுவன்" என்று காமாட்சி முகம் பூரிப்படையச் சந்தோஷமாகக் கூறினாள்.

சுந்தரம் வாத நோயினால் பீடிக்கப்பட்ட காலத்திலிருந்து காமாட்சி, வீடுவீடாகச் சென்று பாத்திரங்கள் கழுவிச் சம்பாதிக்கும் பணத்தில் தான் தன் குடும்பத்தைப் பார்த்து வருகின்றாள்.

நோயினால் பீடிக்கப்பட்டிருந்த சுந்தரத்திற்குக் காமாட்சி யைப் பார்க்க பாவமாக இருந்தது. தான் குடும்பத்தைப் பார்க்க வேண்டிய நிலையில் எனக்காகவும், பிள்ளைகளிற்காகவும் காமாட்சி கஷ்ரப்படு கிறாளே என்று தன் மனைவியை இரக்கப் பார்வையோடு பார்த்தான்.

பார்த்த சுந்தரம், "எப்பதான் எங்களுக்க விடிவு காலம் வருமா தெரியேல, கடவுள் நோயையும் தந்து கூடவே வறுமையையும் தந்திட்டான். ஏன்தான் எங்கள இப்படி சோதிக்கிறான்? போன பிறவியில என்ன பாவம் செய்தனோ தெரியேல" என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

நோயாலும், வறுமையாலும் துன்பப்பட்ட தன் கணவன் மனதால் துன்பப்படக் கூடாது என்று எண்ணிய காமாட்சி "கடவுள் நல்லவையளத்தான் சோதிப்பான் எங்களுக்கும் விடிவு காலம் பிறக்கும்" என்று தன் கணவனை ஆறுதல்ப் படுத்தினாள்.

சுந்தரமும், காமாட்சியும் கவலையுடன் பேசிக் கொண்டிருந்த தைக் கண்ட அவர்களின் மூத்த மகன் தீபன் "அம்மா... நீ எவ்வளவு நாளைக்குத்தான் எங்களுக்காகக் கஷ்ரப்படுவாய்? நான் படிச்சது காணும் ஒரு சின்ன நாட்டுக்கு என்றாலும் போய் குடும்பத்தைப் பார்க்கிறன்" என்றான்.

"போகலாம் தான் தம்பி ஆனால் அதுக்கும் எங்களிட்ட காசுவேணுமே, இருக்கிற காணி நிலத்தை வித்துத்தான் உன்னை அனுப்பிற என்றால் அனுப்ப வேணும்" என்றாள் காமாட்சி.

காமாட்சி அவ்வாறு கூறவும், சுந்தரம் சிறிது நேரம் யோசித்து விட்டு, "எங்களிட்ட நாலு பரப்புக் காணி இருக்கிது தானே அதில இப்போதைக்கு நாங்கள் என்ன செய்யப் போறம்? விவசாயம் கூட செய்ய ஏலாமல் கடவுள் என்னை முடமாக்கி வைச்சிருக்கிறானே. அதில மூன்று பரப்புக் காணியை விற்று அவனை வெளிநாட்டுக்கு அனுப்புவம். எத்தினை காலத்திற்குத்தான் கஷ்ரப்பட்டுக் கொண்டிருக்கிறது? மதுராவும் வயசுக்கு வந்திட்டாள் காலாகாலத்தில அவளை ஒரு நல்லவனின்ற கையில பிடிச்சுக் குடுக்க வேணாமே?" என்று கூறினான்.

சுந்தரம் கூறியதைக் கேட்ட காமாட்சி, "சரியப்பா நீங்கள் சொல்லுற யோசனை நல்லாத்தான் இருக்கு. நாங்கள் காணியை விற்று தீபனை வெளிநாட்டுக்கு அனுப்புவம். காணி விற்கிறதைப் பற்றி பழனி அண்ணேட்டச் சொன்னால் அதற்கான ஏற்பாடுகளை அவர் செய்து தருவார். நான் இதைப்பற்றி அவரோட கதைக்கிறன்." என்று கூறிய காமாட்சி, நனைந்த தன்னுடைய ஆடையை மாற்றிவிட்டு மதியவேளை உணவு தயாரிக்கச் சமையலறைக்குச் சென்றாள்.

நான்கு நாள் தொடர்ந்து பெய்த மழையினால் காமாட்சியின் சமையலறை நிலம் நன்றாக ஊறி இருந்தது. காமாட்சி அடுப்பில்ப் பானையை வைத்து உலை வைக்க விறகுகளை அடுக்கினாள். விறகில் நெருப்பைப் பற்ற வைக்க தீப்பெட்டியை எடுத்தாள். தீப்பெட்டியில் ஈரம் பற்றியிருந்தது. அவள் அந்த அடுப்பை பற்ற வைக்க அந்தத் தீப்பெட்டியோடு போராடி ஒரு மாதிரியாகப் பற்ற வைத்து விட்டாள். அடுப்பு விசாலமாக எரிந்து கொண்டிருந்தது. அடுப்பில் தண்ணீரைக் கொதிக்க வைத்துவிட்டு அரிசி, காய்கறிகள் வாங்க பக்கத்துத் தெருக் கடைக்குச் சென்றாள். கடையில் கடனிற்குச் சாமான் வாங்கி ஏற்கனவே கடனேறி இருந்தது போலும், காமாட்சி கடை வாசலிற்கு வரவும் கடைக்காரன்,

" என்ன காமாட்சியக்கா கடன்காசு ஏறிப்போய்க் கிடக்கிது எப்ப கடனைத் தரப் போறியள்?" என்று கடைக்காரன் கேட்கவும் காமாட்சியின் மனதில் ஒரு சலனத்தை உண்டாக்கியது. சாமான் வாங்காமல் திரும்பிப் போய் விடலாமா? என்று எண்ணியவள் "இன்னும் எத்தனை நாளைக்கு, தீபன் வெளிநாடு போன பிறகு இப்படியான வார்த்தைகளைக் காதால் கேட்க வேண்டி வராது" என்று மனதில் நினைத்துவிட்டு "எப்படியும் அடுத்த கிழமை தந்திடுவன் தம்பி" என்று கூறி அவனைச் சமாளித்தாள் காமாட்சி.

கடைக்காரனைச் சமாளித்த காமாட்சி, காய்கறிகளை வாங்க முன் கடைக்காரனிடம் காய்கறிகளின் விலையை விசாரித்தாள். மாரி காலம் என்பதால் காய்கறிகளின் விலை தங்க விலைக்கு நிகராகியது. அதனால் காமாட்சி மலிவான விலைக்குக் கிடைத்த அரிசியையும், பருப்பு, சோயாவையும் கடனாக வாங்கினாள்.

வறுமை என்று எதைக் கட்டுப்படுத்தினாலும், வயிற்றுப் பசியைக்கட்டுப்படுத்த முடியுமா? தான் சாப்பிடா விட்டாலும் நோயில் இருக்கும் தன் கணவனிற்கும், தான் பெற்ற மூன்று பிள்ளைகளிற்கும் கஞ்சியோ, கூழோ மூன்று வேளையும் கொடுப்பாள்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இன்று தான் காமாட்சி சோறு சமைக்க முடிவு செய்து அரிசி, சாமான்களை வாங்கினாள்.

கடைக்குச் சென்று வீடு திரும்பிய காமாட்சி வீட்டிற்குள் நுழையும் போதே இருமிக்கொண்டு வந்தாள். விசாலமாக எரிந்து கொண்டிருந்த அடுப்பு அணைந்து வீடெங்கும் ஒரே புகைமயமாக இருந்தது. அந்தப்புகை காமாட்சியின் சுவாசத்துள் சென்றதுதான் அவள் இருமியதற்குக் காரணம்.

காமாட்சி மூச்சு விட முடியாமல் இருமிக்கொண்டே மீண்டும் அடுப்பைப் பற்றவைக்க முயற்சித்தாள். அந்த முயற்சியில் காமாட்சி வெற்றி பெறவே, மதுராவும் சமையலறைக்குள் வந்து சமைப்பதற்காக உதவி செய்து கொடுத்தாள். சிறிது நேரத்தின் பின் சமையல் முடிவிற்கு வந்தது. காமாட்சி தன் கணவனுக்குச் சாப்பாட்டைக்கொடுத்துவிட்டு

பிள்ளைகளிற்கும் கொடுத்துத்தானும் சாப்பிட்டாள். சாப்பிட்டுக் கைகளைக் கழுவியபடி "மதுரா நான் பழனி யண்ணையின்ர வீட்டுப்பக்கம் போயிட்டு வாறன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றாள்.

காமாட்சி பழனியின் வீட்டுக் கதவோரத்தில் நின்று "கனகாக்கா... கனகாக்கா..." என்று பழனியின் மனைவி கனகாவை அழைத்தாள். "யாரது காமாட்சியா...? உள்ள வா காமாட்சி" என்று அவளை அழைத்து உள்ளே அமரச்செய்தாள்.

காமாட்சி சோபாவில் அமர்ந்தாள் அவளிற்கு அந்த சோபா மிகவும் இதத்தைக்கொடுக்கவே அவள் கற்பனையில் மிதந்தாள். தீபன் வெளிநாட்டிற்க்குப்போனால் நாங்களும் கனகாக்கா மாதிரி பெரிய மாளிகை கட்டி சோபா எல்லாம் வாங்க வேணும், என்று மனதில் கற்பனைக்கோட்டை கட்டினாள். அந்தக் கற்பனையிலிருந்து விடுபட்ட காமாட்சி கனகாவோடு கதைக்க ஆரம்பித்தாள்.

"நான் காலையில் உங்கட வீட்டுக்குப் பாத்திரம் கழுவுறதுக்காக வந்தனான். வீடு பூட்டி இருந்தது. திரும்பிப்போயிட்டன்" என்று காமாமட்சி கதையைஆரம்பித்தாள்.

"ஓம், காமாட்சி நானும் பழனியண்ணையும் நேற்று ஒரு அலுவலாய் வெளியூருக்குப் போய் இப்பத்தான் வந்தனாங்கள். அதுதான் வீடு பூட்டியிருந்தது" என்று கனகா காமாட்சிக்கு விளக்கம் கூறிக்கொண்டிருக்க பழனி குளித்து விட்டு உள்ளே வந்தான்.

"என்ன... காமாட்சி... வழக்கமாய்க் காலையில் தானே வாறனீ என்ன இண்டைக்குப் பின்னேரம் வந்திருக்கிறாய்?"

"ஓம் பழனியண்ணை உங்களிட்ட முக்கியமான ஒரு அலுவலாய்த்தான் வந்தனான். என்னெண்டா... என்று காமாட்சி கதையை இழுக்க கனகா அவளின் கதையில் குறுக்கிட்டு "அப்பா.... காமாட்சியோட கதைச்சுக்கொண்டிருங்கோ நான் ரீ போட்டுக்கொண்டு வாறன்" என்று கூறிவிட்டுச் சமையலறைப் பக்கமாகச் சென்றாள்"

"சொல்லு காமாட்சி என்ன அலுவலாய் என்னட்ட வந்தனீ?"

"அது எனென்டால் பழனியண்ணை எங்களிட்டை நாலு பரப்புக்காணி இருக்கிது தானே அதில மூண்டு பரப்புக் காணியை விற்க வேணும் காணியை வாங்கிறதுக்கு யாரும் நல்ல ஆக்கள் உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கோவன்" என்றாள் காமாட்சி

"காணியை ஏன் இப்ப விற்கிறாய்? காணியை விக்கிற அளவுக்கு என்ன அவசரம் உனக்கு? ஒரு பொம்பிளைப் பிள்ளையும் இருக்கு அவளுக்கு நல்ல ஒரு காரியம் செய்து வைக்க அந்தக் காணி உனக்கு உதவாதே?" என்று பழனி காமாட்சியின் குடும்பத்தின் மீது அக்கறை காட்டிப்பேசினான்.

"நீங்கள் சொல்லுறதும் சரிதான் அண்ணே! நான் தீபனை வெளிநாட்டிற்கு அனுப்புவம் எண்டு நினைச்சிருக்கிறன். அதுக்கு நிறையக் காசு வேணும். அதுக்கு நாங்கள் எங்க போறது? எங்களுக்கெண்டு இருக்கிறது அந்தக்காணிதானே அண்ணே. அதை வித்துக்கித்து எண்டாலும் தீபனை வெளிநாட்டிற்கு அனுப்பி வைச்சன் எண்டால் அவன் பிறகு தன்ர தங்கையாரைப் பார்ப்பான் தானே என்று பழனிக்குக் காமாட்சி விளக்கம் கூறினாள்.

"அப்பிடி என்டால் நல்ல விஷயம் தானே காமாட்சி நான் விசாரிச்சுப் பார்க்கிறன் யாராச்சும் நல்ல விலைக்கு எடுக்கிறது என்றாள் உனக்குச் சொல்லுறன்."

இருவரும் கதைத்துக்கொண்டிருக்க கனகா தேனீரோடு வந்தாள். பழனிக்குத் தேனீரைக்கொடுத்துவிட்டு காமாட்சிக்கு கனகம் தேனீரைக்கொடுக்க, "ஏனக்கா எனக்கு இப்ப... நான் போகப் போறன்" என்று கூறிய காமாட்சி தனது வீட்டிற்குச்செல்ல ஆயத்தமானாள்.

"இரு காமாட்சி, குளிருக்கு ரீ குடிச்சால் நல்லாத்தானே இருக்கும், குடிச்சிட்டுப்போவன்" என்று கனகா கூற காமாட்சி சூடான தேனீரைத் தனது கைகளாலும் பற்றி தன் வாயால் ஊதி ஊதிக்குடித்துக்கொண்டிருந்தாள்

காமாட்சியும், பழனியும் கதைத்துக்கொண்டிருந்தது கனகா வின் காதில் விழுந்தது போலும் "என்ன காமாட்சி ஏதோ காணி விற்கிற விஷயமாகப் பேசின மாதிரிக் காதில விழுந்திது.....?" என்று கனகா காமாட்சியைப் பார்த்துக்கேட்டாள்.

"ஓமக்கா.. தீபனை வெளிநாட்டிற்கு அனுப்ப வேணும். கையில காசில்ல அதுதான்..." என்று கனகா கேட்ட கேள்விக்கு காமாட்சி பதிலளித்தாள்.

"ஏனப்பா நாங்களே அந்தக் காணியை வாங்கினால் என்ன? இப்ப நாங்கள் அதை வாங்கி ஏதாச்சும் பயிர்பச்சையை வளர்ப்பம். தீபன் வெளிநாட்டுக்குப்போனதும் காமாட்சியின் குடும்பமும் நல்லா வந்திடுந் தானே, அப்ப நாங்கள் திரும்பவும் காமாட்சிக்கு விற்பம். வேற யாரிண்டையும் கையில அந்தக் காணி போனால் காமாட்சிக்குத் திரும்பக் கிடைக்காது" என்று தன் மனதில் தோன்றிய யோசனையைக் கனகா பழனிக்குக் கூறினாள்.

பழனி சற்று நேரம் யோசித்து விட்டு "சரி கனகம் நீ சொல்லுற மாதிரியே செய்வம். எனக்குப் பிரச்சினை இல்லைத்தானே காமாட்சி?"

"அண்ணே! அது எங்கட பரம்பரைக்காணி விக்கிறதுக்கு மனசில்லைத்தான் ஆனால் வேற வழியில்லாமல்த்தான் விக்கிறதுக்கு முடிவு செய்தனான். நீங்களே அந்தக் காணியை வாங்கிறது என்று சொன்னதில் எனக்குச்சந்தோஷம் தான். எதுக்கும் வீட்டுக்குப்போய் இவரோட கதைச்சிட்டுச் சொல்லுறன் அண்ணே!" என்று கூறிவிட்டுக் காமாட்சி தன் வீட்டிற்கு சென்றாள்.

காமாட்சி வீட்டிற்குள் நுழையவும் சுந்தரம், "என்ன காமாட்சி பழனியண்ணை என்னவாம்?" என்று கேட்கச் காமாட்சி சுந்தரத்திற்கு விடயத்தைக்கூறினாள்

"சரி காமாட்சி நல்ல விடயங்களைத் தள்ளிப்போடாமல் நேரத்தோட செய்திடோனும் நாளைக்கே காணி விஷயத்தை முடிச்சிட்டு வெளிநாட்டுக்கு அனுப்பிற அலுவலைப் பார்க்கவேணும்"

"ம்...ம்... நாளைக்குக் காலையில உறுதி எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு தங்கட வீட்டை வரச்சொல்லித்தான் பழனியண்ணை சொன்னவர். நாளைக்கே அந்த அலுவலை முடிச்சு விடலாம்"

"அம்மா... அப்பாக்குத் தேத்தண்ணி போடப்போறன் உங்களுக்கும் தாறதே?" குசினப் பக்கமாய் மதுராவின் குரல் கேட்க அதற்குப் பதில் கூறும் முகமாகக் காமாட்சி "நான் இப்பான் கனகாக்க வீட்டில் ரீ குடிச்சனான். எனக்கு வேணாம் அப்பாக்கும் குடுத்து கொண்ணனுக்கும் குடு. எங்க சின்னவன்...? பொழுதுபட்டிட்டுது இன்னும் வீட்டுக்கு வரேல நல்லா விளையாட்டுக் கூழ்ப்போச்சுது அவருக்கு இனி அடி போட்டால் தான் சரி" என்று காமாட்சி கூறிக்கொண்டிருக்கவும், சின்னவன் ஒரு பாட்டோடு வீட்டிற்குள் நுழைந்தான். சின்னவனைக் காணவில்லை என்ற கோபத்தில் இருந்த காமாட்சி "எங்க சுத்திட்டு வாறாய்? போய்க் கால் முகத்தைக் கழிவிட்டு போய்ப்படி" என்று சின்னவனைப்பேசினாள்.

காமாட்சி அவ்வாறு கூறவும் சின்னவனிற்கு கோபம் வந்தது. அந்தக் கோபத்தினை வெளிக்காட்டும் முகமாக, "ஒரு உடுப்பு எடுத்துத் தரத்தெரியாது. என்னைப் பேச மட்டும் தெரியும். எல்லாரும் தபால் பெட்டி வருகுது.... தபால் பெட்டி வருகுது என்று நக்கல் பண்றாங்கள் ஒரே அவமானமாக இருக்கு" என்று தாயைப் பேசினான்.

சின்னவன் இரண்டு ஆடைகளைத் தான் மாறிமாறி அணி வான். அந்த ஆடைகள் இரண்டு வருடத்திற்கு முன்னர் ஒரு தீபாவளிக் கும் அவனது பிறந்த தினத்திற்கும் எனக் காமாட்சி வாங்கிக்கொடுத்த ஆடைகள் தான். அந்த இரு ஆடைகளும் நிறம் மங்கி இடையிடையே சிறு சிறு கிழியல்களும் இருந்தது. அதனால் தான் சின்னவனின் நண்பர்கள் அவனைத் தபால்பெட்டி என்றழைக்க காரணம்.

சின்னவன் அவ்வாறு கூறவும் காமாட்சியின் மனம் சோர்ந்து கவலையடைந்தது. காமாட்சி சின்னவனைச் சமாதானப்படுத்தும் முகமாக "இன்னும் கொஞ்ச நாளைக்குத்தானே ராசா நீ இப்பிடித் திரியப் போறாய். உன்ர கொண்ணன் வெளிநாடு போன பிறகு உன்னை ராஜா மாதிரி வைச்சிருப்பன் தானே" என்று காமாட்சி அவனைச் சமாதானப் படுத்தினாள்.

காமாட்சி அவ்வாறு கூறியதைக் கேட்ட சின்னவன், "அய்யா... ஜாலி, அண்ணே வெளிநாட்டுக்குப் போனால் நான் விதவித மாய் உடுப்புப் போடுவனே... விதவிதமாய் சாப்பிடுவனே..." என்று கூறி சின்னவன் சந்தோஷத்தில் துள்ளிக்குதித்தான்.

"மதுரா... இருண்டு போச்சுது விளக்குக்கு கொழுத்த வேணும் அந்த மண்ணெண்னெய்ப்போத்திலையும், லாம்பையும் கொண்டு வா" என்று காமாட்சி மகளை அழைத்துக் கூறவும் மதுரா விளக்கையும், எண்ணெயையும் கொண்டு வந்து தாயிடம் கொடுத்தாள்.

காமாச்சி லாம்பில் எண்ணெயை ஊற்றி விளக்கை ஏற்றிக்குடிசையின் நடுவே கொழுவப் பட்டிருந்த கம்பியில் கொழுவினாள். அந்த வெளிச்சத்தில் சின்னவன் தன் பாடப் புத்தகத்தைக் கொண்டு வந்து படித்தான்.

காமாட்சி மதியம் சமைத்த சோற்றைக் கறியுடன் பிசைந்து, படுக்கையில் இருந்து எழும்பி நடக்க முடியாத தன் கணவனிற்கு ஊட்டி விட்டுப் பின்பு பிள்ளைகளும் தானுமாக ஒன்று கூடி சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குச் சென்றாள்.

அடுத்த நாள்க் காலையில் காமாட்சியும், மகனுமாகக் காணி உறுதியுடன் பழனியின் வீட்டிற்குச் சென்றனர். பழனியின் வீட்டில்க் காணி விலை பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. காமாட்சி கூறிய விலைக்கே பழனி ஆமாதித்து வக்கீலை வரவழைத்து உறுதி முடித்தனர்.

"தீபனை ஏஜென்சி மூலமாக அனுப்ப நானே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யிறன் நீங்கள் தேவையான காசைத் தந்தால் சரி" எனப் பழனி காமாட்சிக்கு உதவி செய்யும் முகமாகக் கூறினான்.

பழனியின் உதவியளை ஏற்றுக்கொண்ட காமாட்சி "சரி அண்ணை நீங்களே செய்யிற எண்டால் நல்லம் தானே காணிக்குரிய காசை வைச்சு நீங்களே அலுவலை முடியுங்கோ" என்று கூறினாள்.

"சரி காமாட்சி என்ர மகன் கனடாவால வந்து கொழும்பில நிக்கிறான். அவனைக் கூட்டி வரப்போறன் நீங்கள் ரெண்டு பேரும் கனகாவோட கதைச்சிட்டுப்போங்கோ" என்று காமாட்சிக்கும் தீபனுக்கும் கூறிவிட்டு தனது காரை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

"சரி கனகாக்கா, பக்கத்துத் தெருவில இருக்கிற சுமதியின்ர வீட்டுக்குப்போக வேண்டி இருக்கு நாங்களும் போயிட்டு வாறம்" என்று கூறிய காமாட்சி பழனி வீட்டில் இருந்து வெளியேறினாள்

"சரியப்ப நீ வீட்டுக்குப்போ நான் சுமதி வீட்டில பாத்திரம் கழுவ வரச்சொன்னவை போய்க் கழுவிக்குடுத்திட்டு வாறன்" என்று தன் மகனை வீட்டிற்குச் செல்லுமாறு கூறிவிட்டு காமாட்சி சுமதியின் வீட்டை நோக்கிச்சென்றாள்.

சுமதி கழுவவேண்டிய பாத்திரங்களை எடுத்துக் கிணற்றடியில் வைத்தாள். அதைக் காமாட்சி எடுத்துக் கழுவிக் கொண்டிருந்தாள். காமாட்சி கழுவிக்கொண்டிருக்கு சுமதி கிணற்றடியில் இருந்த ஒரு கல்லில் குந்தியவாறு "ஏன் காமாட்சி மதுரா வீட்டில சும்மாதானே இருக்கிறாள். அவளையும் பாத்திரம் கழுவ கூட்டி வரலாம் தானே உனக்கு உதவியாயும் இருக்கும் சம்பாதிக்கிற மாதிரியும் இருக்கும்" என்று காமாட்சிக்குக் குத்தலாக ஒரு கதையைப் போட்டாள்

சுமதி அவ்வாறு கூறவும் காமாட்சிக்குக் கோபம் தலைக்கேறியது. "ஏதோ இவளின்ர சோத்தில தான் என்ர பிள்ளை வளர்ற மாதிரியல்லோ இவள் கதைக்கிறாள் என்ர மகனும் வெளிநாடு போன் அப்ப நானும் நல்லாத்தான் இருக்கப்போறன். அந்த நேரம் இவளுகளையெல்லாம் வைக்க வேண்டிய இடத்திலை வைக்கிறன்." என்று தன் மனதுக்குள்ளேயே சுமதியைத் திட்டிவிட்டு, அவளின் கதைக்குத் திரும்ப பதில் பேச விரும்பாதவளாய் ஒரு சிரிப்போடு நிறுத்திக்கொண்டாள். பாத்திரங்கள் கழுவி முடிந்ததும் பணத்தை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள். காமாட்சி

மழை பெய்திருந்தமையினால் மண் ஈரலித்து நன்றாகப் பதப்பட்டிருந்தது. அதனால் மதுரா தன் குடிசைக்கு முன்னால் பூங்கன்றுகளை நாட்டிக்கொண்டிருந்தாள். தாய் வருவதைக் கண்ட மதுரா தான் செய்த வேலைகளை அப்படியே விட்டுவிட்டு சந்தோஷத்துடன் தாயை நோக்கி ஓடினாள் "அம்மா எனக்கு ஒரு சந்தோஷமான விஷயம் சொல்லட்டுமா?" என்று தாயைக்கேட்க, காமாட்சி அதைக் கேட்கும் ஆவலுடன் "என்னடி சந்தோஷமான விஷயம்?" என்று மதுராவைக் கேட்டாள்

மதுராவிற்கு சந்தோஷத்தின் மிகுதியினால் சிரித்துக் கொண்டே "கொஞ்ச நேரத்திற்கு முன்னம் தான் கனகாக்கா வந்திட்டுப் போறா. பழனியண்ணை கொழும்பிலை இருந்து போன் பண்ணின வராம் வாற கிழமைக்குள்ள அண்ணா வெளிநாட்டுக்குப் போற மாதிரி எல்லா ஏற்பாடுகளும் செய்திட்டாராம். அண்ணாவை ரெடியா இருக்கச் சொன்னவராம். என்றுசொல்லிற்று இப்பபோறா" என்று கூறினாள்

காமாட்சிக்குத் தான் வானில் பறப்பது போல ஒரு சந்தோசம் சந்தோசத்தில் அவளுடைய மேனி புல்லரித்தது. மதுரா கூறிய விடயத்தைத் தன் கணவனோடு வந்து கதைக்க காமாட்சி சுந்தரத்தின் பக்கமாகச் சென்றாள்.

அவ்வேளை தீபன் "அம்மா...." என்று அழைத்தபடி வீட்டிற்குள் நுழையவும் காமாட்சி "வா தீபன் எனக்கு விஷயம் தெரியுமா?" என்று தீபனைக் கேட்டாள். "என்னமேம்மா என்ன விஷயம்?" "நீ வாற கிழமையே வெளிநாட்டிற்குப் போகப்போறாய்" என்று காமாட்சி கூறியதும் சுந்தரமும், தீபனும் மகிழ்ச்சியில் மிதந்தனர்

மகிழ்ச்சியில் அமிழ்ந்திருந்த தீபன் திடீரென அம்மா என்றான். தீபன் தன்னை அழைத்த காரணத்தை அறிந்து கொள்ள காமாட்சி "என்ன தம்பி?" என்று கேட்டாள். "நான் வெளிநாட்டிற்குப் போறது எண்டால் என்னட்ட நல்ல உடுப்புக்குள் இல்லை உடுப்புகள் வாங்க வேணும், அதுக்கு என்ன செய்யிது?" என்று தாயின் முகத்தைப் பார்த்துக்கேட்டான்.

தீபன் கேட்ட கேள்விக்காகக் காமாட்சி உடனே தன்காதில் இருந்த தோட்டைக் கழற்றித் தீபனின் கையில் கொடுத்து "அதை அடகு வைச்சு உனக்குத் தேவையான உடுப்புக்கள், சமான்களை வாங்கிவா" என்றான் காமாட்சி.

காமாட்சிக்கு நகை என்று இருந்தது அந்தத்தோடு ஒன்றுதான். அதையும் கழற்றிக்கொடுத்து விட்டு வெறுமையாக நின்றாள். தீபன் தாயிடம் தோட்டை வாங்கி விட்டுத் தாயை ஒரு பரிதாபப் பார்வை பார்வையில் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய் நீ வெளிநாடு போன பிறகு எனக்கென்று நகைகள் செய்து தருவாய்தானே" என்று ஒரு சிரிப்போடு காமாட்சி கூறினாள்.

தீபன் தன் தாயின் சிரிப்பிற்கு பதில் சிரிப்பு சிரித்துவிட்டு தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு அடகு வைப்பதற்காக பிரதான வீதியில் அமைந்துள்ள ஒரு வங்கிக்குச் சென்று கொண்டிருந்தான். அவன் தெருவில் சைக்கிளை ஓட்டிக்கொண்டிருக்க அவனுடைய மனம் வெளிநாட்டு வாழ்க்கை பற்றி ஓட்டிக்கொண்டிருந்தது. தன்னை மறந்து அவன் கற்பனையில் மிதக்க அவனைப் பின் தொடர்ந்து வந்த டிப்பர் வாகனம் கண்ணிமைக்கும் நொடியில் தீபனைத் தூக்கி எறிந்தது. தீபன் "அம்மா...." என்று அலறியபடி ஒரு சத்தத்தின் பின் ஒரு சலனமும் இன்றி அவன் உயிர் அவனைவிட்டுப் பிரிந்தது.

மகனின் இறந்த செய்தியைக் கேட்ட காமாட்சி ஏங்கியவளாய் மயக்கமுற்றுக் கீழே விழுந்தாள். மயங்கி விழுந்த காமாட்சிக்கு நீண்ட நேரமாகக் கண் முழிக்கவில்லை

"அம்மா...அம்மா... எழும்புங்கோ கண்ணை முழிச்சுப் பாருங்கோ" என்று மதுராவும், சின்னவளும் தாயை அசைத்துப் பார்த்தனர். காமாட்சி அசையவில்லை. அந்த ஊரில் உள்ள வைத்தியர் மூலம் காமாட்சியின் உடல் பரிசோதிக்கப்பட்டது. காமாட்சி மாரடைப்பு நோய் தாக்கி இறந்து விட்டதான வைத்தியர் தெரிவித்தார்.

அண்ணன் இறந்த கவலையில் இருந்த மதுரா, சின்னவனிற்கு தாய் இறந்த செய்தியைக் கேட்டவுடன் புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போல இருந்தது

மதுராவும், சின்னவனும் எழுந்து நடக்க முடியாத தந்தை கட்டி அணைத்து இருவரும் விக்கி விக்கி அழ சுந்தரம் இருபிள்ளைகளையும் கட்டியணைத்தபடி, "உங்களுக்கு ஆறுதலாக இருக்க வேண்டிய என்னைக் கடவுள் முடமாக்கினது போதாது என்று மனதுக்கு ஆறுதல் தந்து உழைச்சுப் பார்க்கிறதுகளின்ர உயிரையும் கடவுள் எடுத்திட்டானே" என்று சுந்தரம் மனம் நொந்து கதறி அழுதான்.

உறவுகள் பல வசதியான நிலையில் இருந்தும் சுந்தரத்தின் குடும்பத்தையாரும் திரும்பிப் பார்க்கவில்லை. சாவு வீட்டுச் செலவிற்கு கூட அவர்கள் யாரும் உதவி செய்யவில்லை. சாவுச் செலவுக்கென பழனி கடனாகக் கொடுத்த பணத்தில் தான் மதுரா தாயினதும் அண்ணனினதும் சாவுச் செலவை செய்தாள்

இதுவரை உதவி செய்யாத உறவுகளிடம் உதவி கேட்டுக்கையேந்தி நிற்க விரும்பாத மதுரா தன் கையே தனக்குக்குதவி என்றெண்ணி நோய்வாய்ப்பட்டிருந்த தன் தந்தை நல்லபடி பராமரிப்பதற்கும் தன்னுடைய தம்பி படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற சோக்கிலும் தன் தாயின் வேலையைத் தானே செய்ய ஆரம்பித்தாள்...